ஆகவே, paver block கல்லைப் பதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட தூரமாக இருந்தால் paver block கற்களைப் பதிக்கலாம். கிராமச் சாலைகளைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 4, 5 கிலோ மீட்டர் சாலை நீளமாக இருக்கின்ற காரணத்தினால் அவ்வளவு தூரத்திற்கு paver block கற்களைப் பதிக்க முடியாது. ஆகவேதான் தார்ச் சாலை அமைக்கப்படுகின்றது. குறுகிய பகுதியாக இருந்தால், நீர்வழிப் பகுதியாக இருந்தால், பாதிக்கப்படுகின்ற பகுதிகளிலே paver block கல்லால் அமைக்கப்பட்டிருக்கின்றது. மலைப் பகுதிகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தப் பகுதிகளிலெல்லாம் நீர் வழிந்து ஓடுகின்றபோது அந்தச் சாலை பாதிப்புக்குள்ளாகிறது. அவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்ற பகுதிகளிலே paver block கற்களைப் பயன்படுத்தி அமைக்கின்ற சூழலை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

துணை மின் நிலையம்

***2050 திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் பாப்பரம்பாக்கம் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இடம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதி, பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க ஏற்கெனவே ஒரு வருடத்திற்கு முன்பாகவே நிலம் மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், சிறு, சிறு குறைகளால் அது தடைப்பட்டு வருவதாகவும், ஒரு வருடத்திற்கு மேலாகி அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நிற்கிறது என்பதுதான் தகவல். எப்போது இந்தப் பணி தொடங்கும்? அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல ஒரு வருடமாகக் காத்திருக்கவில்லை. அது தோப்புப் புறம்போக்கு. தோப்புப் புறம்போக்கு என்பதை வகை மாற்றி, அதற்குப் பின்னால்தான் அதை மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்க முடியும். இப்போது முன் நுழைவு அதாவது* enter upon permission *மட்டும் கொடுத்திருக்கின்றார்கள். அந்தத் தோப்புப் புறம்போக்கை* E.B.*-க்கு மாற்றுவதற்கான சுற்றிலே இருக்கின்றது. மாண்புமிகு அம்மா*

அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டதன் வாயிலாகத்தான் 3.3 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரால் முன் நுழைவு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அரசினுடைய ஆணை பெறப்பட்டவுடன், உடனடியாக அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நிதி ஒதுக்கப்பட்டாகிவிட்டதா? அந்தப் பணி எப்போது முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடம் தேர்வு செய்யும்போதே, அதற்கான நிதியை ஒதுக்கிவிட்டுத்தான் இடம் தேர்வு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் அதுபோல்தான் திட்டம் தீட்டுவார்கள். ஆக, அதற்குண்டான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இடம் மின்சார வாரியத்தின்வசம் வந்தவுடன் அந்தப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இந்தக் காலதாமதம் என்பது நிலத்தின் வகைப்பாட்டை மாற்றுகின்றபோது ஏற்படுகின்ற காலதாமதமேயொழிய, நிதிநிலையினால் ஏற்படுகின்ற காலதாமதம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தில் பிறந்த மலர் முகத் தாயே, ஜகத்தில் உங்களை செந்தமிழால் போற்ற எனக்கு வார்த்தைகள் இல்லை அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வியர்வை சிந்தியபடி வீதியில் நின்ற தொண்டர்களைக் கோட்டைக்கு அனுப்பி வைத்த கொள்கை மகாராணி நீங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) செங்கையில் செங்கோலின் அரசாட்சி, உங்கள் திறமைக்கு அதுவே அத்தாட்சி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரம், விழுப்புரம் மாவட்டத்திலேயே அதிவேகமாக வளர்ந்துவரும் ஒரு நகரமாகும். எனவே, வளர்ந்துவரும் கள்ளக்குறிச்சி நகரத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய கள்ளக்குறிச்சி நகரத்தில் அல்லது நகரத்தின் அருகாமையில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதியின் அருகில் இருக்கின்ற சங்கராபுரம், அரியலூரில் 765 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தத் துணை மின் நிலையங்கள் அமைக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த கள்ளக்குறிச்சி பகுதியில் சீரான மின்சாரம் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

சாலையை மேம்படுத்துதல்

***2453—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரையுள்ள சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரைப்புதூர் ஊராட்சியில் நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரையுள்ள ஊராட்சி தார்ச் சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2016-2017 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு ஊராட்சி சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.